//தனிகவனம்// மிக மிக அவசரம்//நினைவூட்டு//

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 3715/ஆ5/2024, நாள். 15/10/2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – நீதிமன்ற வழக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் தொடங்கப்பட்ட சுவோ– மோட்டோ அவமதிப்பு வழக்கு (Suo-moto Contempt petition) – அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரம் மற்றும் சானிட்டரி நாப்கின் எரியூட்டு இயந்திரத்தின் செயல்பாட்டு நிலைமைகள் – இயந்திரங்களின் தற்போதைய நிலை – அனுப்பாத பள்ளிகள் அனுப்பக் கோருதல் – தொடர்பாக

பார்வை

1. 05.09.2024 தேதியிட்ட செய்தித்தாள் அறிக்கையின் அடிப்படையில் சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரம் மற்றும் சானிட்டரி நாப்கின் எரியூட்டு இயந்திரத்தின் நிலை குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் சுவோ –மோட்டோ அவமதிப்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் இயக்குநரின் செயல்முறைகள் ந.க,எண்.59803/எம்1/எஸ்1/2024, நாள். 06.09.2024
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 04.10.2024

.....

பார்வை 2–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் நிறுவப்பட்டுள்ள சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரம் மற்றும் சானிட்டரி நாப்கின் எரியூட்டு இயந்திரத்தின் விவரங்கள் Google Sheet Link–;ல் மூலம் கோரப்பட்டு விவரங்கள் பெறப்பட்டது.

பள்ளிகளில் குறைந்தபட்சம் ஒரு சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரம் மற்றும் சானிட்டரி நாப்கின் எரியூட்டு இயந்திரம் வைத்திருப்பதையும், செயல்படாத இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படுவதோ அல்லது மாற்றப்பட்டு செயல்படுவதை உறுதிசெய்து, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரம் மற்றும் சானிட்டரி நாப்கின் எரியூட்டு இயந்திரத்தின் புகைப்படத்தின் நகல்களுடன் (புகைப்படம் 6 நகல்கள்) இவ்வலுவலக ஆ5 பிரிவில் 07.10.2024 பிற்பகல் 12.30 மணிக்குள் நேரில் ஒப்படைக்குமாறு அரசு உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு பார்வை 3–ன் இவ்வலுவலக கடிதம் மூலமாக தெரிவிக்கப்பட்டது. இதில் பல பள்ளிகளிடமிருந்து விவரங்கள் பெறப்படாததால் கோரப்பட்ட விவரங்கள் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு குறித்த நேரத்தில் அனுப்ப இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பொருள் வழக்கு சார்ந்தது என்பதால், இதன்மீது தனி கவனம் செலுத்தி இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரம் மற்றும் சானிட்டரி நாப்கின் எரியூட்டு இயந்திரத்தின் புகைப்படத்தின் நகல்களுடன் (புகைப்படம் 6 நகல்கள்) இவ்வலுவலக ஆ5 பிரிவில் 17.10.2024 பிற்பகல் 12.30 மணிக்குள் நேரில் ஒப்படைக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. தவறும் பட்சத்தில் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியரே முழு பொறுப்பாவார் என திட்டவட்டமாக தெரிவக்கப்படுகிறது.

(குறிப்பு – சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரம் மற்றும் சானிட்டரி நாப்கின் எரியூட்டு இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டோ அல்லது மாற்றப்பட்டு செயல்படும் நிலையில் கண்டிப்பாக இருக்க வேண்டும். அதன் புகைப்படம் 6 நகல்கள் சமர்பிக்கப்படவேண்டும். இதற்கான கால அவகாரம் ஏற்கனவே வழங்கப்பட்டது.)

இணைப்பு –

1. படிவங்கள்
2. விவரங்கள் அனுப்பாத பள்ளிகளின் பெயர் பட்டியல்

15.10.24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்–
மாவட்டக் கல்வி அலுவலர்,
(இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம்.